தமிழ் நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1973 ஆகஸ்ட் 3.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 10.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) அரசினர் தீர்மானம்

வினா நேரத்தை ஒத்திவைத்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைய முதல் அலுவல் "வினாக்கள்—விடைகள்" ஆகும். நேற்றையதினம் நடந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில், இன்றைய கேள்வி நேரத்தை ஒத்திவைக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டபடியால், அதற்கான தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இப்பொழுது கொண்டுவருவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் 22-வது விதியின்கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள "வினாக்கள்—விடைகள்" நிகழ்ச்சியினைத் தள்ளிவைத்து அடுத்த அலுவலான "பேரவைத் தலைவர் தேர்தல்" எடுத்துக்கொள்ளலாம்".

என்கிற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

(2) நடைமுறைக் கேள்விகள்.

(அ) பேரவைத் தலைவர் தேர்தலுக்குமுன் ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்வது குறித்து.

DR. H. V. HANDE : Mr. Deputy Speaker, Sir, I am rising on a point of order. Before you put the motion moved by the Hon. the Leader of the House to vote, I would like to get clarification from the Hon. Deputy Speaker whether the motion is for the

entire removal of the question hour or suspension of question hour. I want to know whether after the question hour, a number of adjournment motions which we have given notice of would be taken up for consideration. We have given a number of adjournment motions on a number of important problems like labour problem, farmers' agitation and non-supply of rice to Kanyakumari, etc. There are so many burning problems affecting the people. May I know from the Hon. Deputy Speaker whether we will be given an opportunity to raise such adjournment motions after the question hour is over. These are very important problems about which the public are concerned very much. Before we . . . . . .

MR. DEPUTY SPEAKER : It was decided yesterday at the meeting of the Business Advisory Committee by all the Party leaders that the question hour might be suspended. My responsibility is only up to the election of the Speaker. Therefore, the Hon. Member's question will be answered by the Hon. Speaker.

DR. H. V. HANDE : As far as the suspension of question hour is concerned, I concede. I would like to know . . . . .

MR. DEPUTY SPEAKER : Dr. Hande, please resume your seat. I will explain. All the items that were included in the Agenda for 4 or 5 days were decided and accepted by the Business Advisory Committee. In that Committee, the hon. Member 's party leader was also present.

DR. H. V. HANDE : It was not discussed in the Business Advisory Committee whether the Adjournment Motions would be discussed or not. It was not discussed whether they would be considered or not.

திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கோருவது என்னவென்றால், வினா-விடை நேரத்தை ரத்து செய்துவிட்டால் கூட, ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொண்ட பிறகு தான் தேர்தலோ மற்ற நிகழ்ச்சிகளோ நடைபெறலாம் என்ற வகையில்தான். அதற்குத்தான் தாங்கள் ஒரு தீர்ப்பு வழங்க வேண்டும்.

1973 ஆகஸ்ட் 3]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நம்முடைய அலுவல்களில் "பேரவைத் தலைவர் தேர்தல்" என்பதற்கு முன்னால் இருக்கும் ஒரே ஒரு நிகழ்ச்சி—வழக்கமான நிகழ்ச்சி—"வினாக்கள்—விடைகள்" ஆகும். அந்த வினா—விடைகளைப் பேரவையின் அனுமதியோடு ஒத்திவைக்கலாம் என்று நம்முடைய விதிகள் கூறுகின்றன. வினா—விடை நேரத்தை ஒத்திவைக்கலாமா என்பதைப்பற்றி நேற்று நடந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எல்லாக் கட்சிகளின் தலைவர்களையும் கலந்து ஆலோசித்தபோது, எல்லோரும் அதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் வருகிற நிகழ்ச்சிகளைப் பொறுத்து, ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வருமா, வராதா என்பதைப் பொறுத்தெல்லாம் நான் சொல்வதற்கில்லை. இன்று பேரவைத் தலைவர் தேர்தலோடு நம்முடைய அலுவல்களை முடித்துக்கொள்வது இந்தப் பேரவையின் மரபாக இருந்து வந்திருக்கிறது. ஆகையால்தான், நேற்றையதினம் நடந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் இதுபற்றி விரிவாக விவாதித்து, கேள்வி நேரத்தை ஒத்தி வைப்போம் என்று சொன்னோம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: கேள்வி நேரத்தைப்பற்றிப் பிரச்சினையே இல்லை. அதுகுறித்த தங்கள் தீர்ப்பை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். ஏனென்றால், அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் அதுபற்றி முடிவாகிவிட்டது. ஒத்திவைப்புத் தீர்மானம் என்பது அவசர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளைப்பற்றியதாகும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், ஒத்திவைப்புத் தீர்மானங்களை, அடுத்த நிகழ்ச்சிக்குப் போவதற்கு முன்பு எடுத்துக்கொள்ளலாம் என்பதுதான். ஏனென்றால், ஒத்திவைப்புத் தீர்மானங்களை நிகழ்ச்சி நிரலில் போடுவதில்லை. அதை எடுத்துக் கொள்வது 'கம்ப்ளீட் டிஸ்க்ரிஷன் ஆஃப் தி ஆனரபிள் டெபுடி ஸ்பீக்கர்.' ஆகவே, உங்களுடைய டிஸ்க்ரிஷனிலேயே ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் கோருகிறபடி இப்பொழுது நாம் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள முடியாது. இதை அவரும்

[பேரவைத் துணைத் தலைவர்] [1973 ஆகஸ்ட் 3

ஒத்துக்கொள்ளுகிறார். இதற்குப் பின்னால் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படுமா என்பது குறித்து நான் தீர்ப்புச் சொல்ல முடியாது. டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்வதுபோல், வழக்கமாக நிகழ்ச்சி நிரலில் 'ஒத்திவைப்புத் தீர்மானங்'களைச் சேர்ப்பதில்லை. இப்பொழுது முதலில் எடுத்துக் கொள்ள வேண்டிய அலுவல் "பேரவைத் தலைவர் தேர்தல்" ஆகும். அந்தத் தேர்தலுக்கு முன்னாலிருக்கும் கேள்வி நேரத்தை ஒத்திவைப்பதைப் பொறுத்து பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆக, . . .

(ஆ) முன்னாள் பேரவைத் தலைவர் தமது பதவி நீக்கம் குறித்து தொடர்ந்துள்ள வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இருக்கும்போது, பேரவைத் தலைவர் தேர்தலை நடத்துவது முறைதானா என்பது குறித்து.

THIRU B. VENKATASWAMY : Sir, I rise on a point of order. According to rule 67, which reads as follows :

" A member, while speaking must not—(i) give his opinion about or refer to any matter on which a judicial decision is pending ".

I want to know from the Hon. Deputy Speaker, whether the calling of nomination for the Speaker is proper or not. Now the matter is pending before the Supreme Court which is the highest authority on the land. In view of that, I want to know whether the conduct of election of Speaker is advisable. Is it advisable to conduct the election in such a situation? The matter is *sub judice*. The matter has already been delayed for 7 months. What is the necessity for us to take up this matter now? Why not we delay it till the receipt of the Supreme Court's decision on the matter? I want a ruling from the Chair on this point.

MR. DEPUTY SPEAKER : First of all, I am taking for granted that the House has given permission to postpone or drop the question hour. Now I come to the point of order raised by hon. Member Thiru Venkatasami. I would like to know the view points of the leaders on the Treasury Benches.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் பிரச்சினை எழுப்பப்பட்டு, தாங்களே இதற்கு விரிவான தீர்ப்பைக்